Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 297 / 2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பஞ்சவர்ணம் |
| Husband Name | : | கர்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.09.2024.

(எதிரி ஆஜர்.)

முதன்மை விசாரணை:–

நான் தற்போது இராமநாதபுரம் பொட்டகவயல் கிராமத்தில் வடக்குத் தெருவில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கர்ணன் என் கணவர். சாட்சி தவஸ்குமார் என்னுடைய மகன். அவர் என்னுடன் குடியிருக்கிறார். ஆஜர் எதிரி அர்ஜுனனை தெரியும். அவர்தான் என் கணவரை கொன்றுவிட்டார். சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒருநாள் ஆடி மாதம் 1–ஆம் தேதி சனிக்கிழமை மாலை சுமார் 06.00 மணியளவில் என் கணவர் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வெளியில் போனார். இரவு 07.00 மணிக்கு என் மகன் தவஸ்குமார் வந்து அப்பா எங்கம்மா என்று கேட்டார். அப்பா வெளியில்

போயிருக்கார் வா அவரை கூட்டிக்கிட்டு வரலாம் என்று சொன்னேன். நானும், என் மகனும் என் கணவரை தேடிப்போனோம். எங்கள் ஊர் மாரியம்மன் கோவிலில் கோவிலுக்கு முன்னால் சிமிண்ட் தளத்தில் என் கணவர் துண்டை விரித்து அதன்மேல் படுத்துக்கிடந்தார். தெற்கே தலையை வைத்து வடக்கே காலை நீட்டி படுத்திருந்தார். ஆஜர் எதிரி அர்ஜுனன் கோவிலில் பொங்கல் வைக்கப் பயன்படுத்தும் முண்டுக்கல்லை எடுத்து ஏய் கர்ணா உன்னைத்தாண்டா தேடிக்கிடக்கிறேன் நீ இங்கே படுத்துக்கிடக்கிறியா என்று சொல்லி கல்லைத் தூக்கி இத்தோடு செத்துத்தொலைடா என்று சொல்லி என் கணவரின் நெற்றியின் மீது மாறிமாறி அந்தக் கல்லை தூக்கிப்போட்டு அடித்தார். என் கணவருக்கு நாக்கு வெளியில் வந்துவிட்டது. கண்முழிகள் எதுவும் இல்லை. என் கணவர் படுத்துக்கிடந்தபோது அங்கு எங்கள் கிராமத்தை சேர்ந்த சிங்காரவேலுவும், வேதராசும் படுத்துக் கிடந்தார்கள். ஆஜர் எதிரி கல்லைப்போட்டதை பார்த்துவிட்டு நானும், என் மகனும் போட்டுராதடா போட்டுராதடா என்று ஓடினோம். சிங்காரவேலும், வேதராசும் அதேபோல் கத்தினார்கள். கத்தியதும் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். எதிரி கல்லைத் தூக்கிப்போட்டபோது இரவு 08.00 அல்லது 08.30 மணியிருக்கும். நாங்கள் கத்தியதைக் கேட்டு ஊர்த்தலைவர் ஹக்கீமும், ஊர்க்காரர்களும் வந்தார்கள். அதன் பிறகு பொட்டகவயலில் இருந்த ஜமாத் ஆம்புலன்சை வரவழைத்து என் கணவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சிகிச்சைக்கு சேர்த்தோம். பெரிய டாக்டர் வந்து பார்த்துவிட்டு என் கணவர் இறந்துவிட்டார் என்று சொல்லிவிட்டார். அப்போது இரவு 10.30 மணியிருக்கும். அதன் பிறகு என் கணவரின் உடலை பிணவறையில் வைத்துவிட்டு என் தம்பி திருநாவுக்கரவுவை பரமக்குடியில் இருந்து வரவழைத்து அதன் பிறகு தேவிப்பட்டினம் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தேன். நான் சொல்லசொல்ல என் தம்பி திருநாவுக்கரசு புகாரை எழுதினார். படித்துக் காண்பித்த பிறகு நான் கையெழுத்து போட்டேன். அறிவேன் சாட்சி என்று என்

தம்பி திருநாவுக்கரசு கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படுவது அந்த புகார்தான். புகார் **அ.சா.ஆ 1/அ.சா.1**. இந்த சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு என் கணவர் எங்கள் தோட்டத்தில் போய்பார்த்தபோது எங்கள் தோட்டத்தில் இருந்த காட்டுக்கருவை மரத்தை யாரோ வெட்டி எடுத்துப்போய்விட்டார்கள் என்று தெரியவந்தது. அதை என் கணவர் பக்கத்து வீட்டில் உள்ள என் மாமா ஆறுமுகத்திடம் சொல்லி யாரோ வெட்டிக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னார். அப்போது கோவிலுக்கு பக்கத்து வீட்டுக்காரரான ஆஜர் எதிரி அர்ஜுனன் அருவாளை தூக்கிக்கொண்டு நான் எப்படா உங்க மரத்தை வெட்டினேன் என்று கேட்டுக்கொண்டு என் கணவரை வெட்ட வந்தார். எந்த சம்மந்தமும் இல்லாமல் நீ ஏன்டா அருவாளை தூக்கிக்கொண்டு வருகிறாய் என்று ஆறுமுகம் கேட்டார். கர்ணா நீ வீட்டுக்குப்போ என்று ஆறுமுகம் சொன்னார். அப்போது ஆஜர் எதிரி என் கணவரைப் பார்த்து ஏய் கர்ணா 2 நாளைக்குள் உனக்கு என் கையில்தான்டா சாவு என்று மிரட்டிவிட்டு சென்றார். அந்த சம்பவம் நடந்த 2 நாட்களுக்கு பிறகு இந்த சம்பவம் நடந்தது. ஆஜர் எதிரி என் கணவர் மீது போட்டகல்தான் நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் கல். இரத்தக்கறை படிந்த சுமார் 21 செமீ நீளமும், சுமார் 16 செமீ அகலமும் உள்ள முண்டுக்கல் ஒன்று **சா.பொ.1/அ.சா.1**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் தலைவாசல் வடக்குப்பார்த்து இருக்கிறது. அந்த கோவிலுக்கு முன்பக்கம் சிமிண்ட் தரை இருந்தது என்று சொன்னால் கோவிலை சுற்றி சிமிண்ட் தளம் உள்ளது. கோவிலுக்கு முன்பக்கம் இருந்த சிமிண்ட் தளத்தில்தான் என் கணவர் படுத்துக்கிடந்தார். சம்பவ சமயத்தில் கோவில் சிமிண்ட் தளத்தில் மொத்தம் 3 பேர் படுத்துக்கிடந்தார்கள். என் கணவரை நாங்கள் மாலை சுமார் 06.00 மணிக்கு

தேடிப்போனோம். நானும், என் மகனும் எந்தெந்த இடங்களில் தேடினோம் என்று கேட்டால் கோவில்வரை தேடிச் சென்றோம். மாரியம்மன் கோவிலுக்கு கிழக்குப்பக்கத்தில் என் வீடு இருக்கிறது என்று சொன்னால் சரிதான். என் வீட்டிலிருந்து மாரியம்மன் கோவில் சுமார் 50 அடி தூரத்தில் இருக்கிறது. என் வீட்டிலிருந்து சுமார் 2 நிமிடத்தில் மாரியம்மன் கோவிலுக்கு போய்விடலாம். என் கணவருக்கு மதுகுடிக்கிற பழக்கம் இல்லை. இந்த வழக்குச் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில், நேரத்தில் என் கணவர் மது அருந்தியிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனைக்கு என் கணவரை கொண்டு சென்றபோது என் கணவர் மது அருந்தியிருந்ததாக மருத்துவர் சொல்லவில்லை. என் வீட்டில் இருந்து பார்த்தால் மாரியம்மன் கோவிலில் என்ன நடக்கிறது என்று தெரியும். எங்கள் வீட்டில் இருந்து புறப்பட்ட 10 நிமிடத்தில் நாங்கள் மாரியம்மன் கோவில் அருகில் போய்விட்டோம். சம்பவம் பற்றி ஊர்த்தலைவர் ஹக்கீம் காவல்நிலையத்திற்கு முதன்முதலில் போன் செய்து தகவல் சொன்னார். சுமார் 3 அல்லது 4 போலிஸ்காரர்கள் எங்கள் ஊருக்கு வந்தார்கள். போலிசாரிடம் ஹக்கீமும், ஊர்க்காரர்களும் நடந்த விவரங்களை சொன்னோம். சொன்ன விவரங்களை போலிசார் எழுதிக்கொண்டார்களா என்று கேட்டால் எழுதியிருப்பார்கள். நாங்கள் யாரும் அப்போது கையெழுத்து போடவில்லை. எங்கள் ஊரிலிருந்து கிளம்பும்போது இரவு சுமார் 09.00 மணியிருக்கும். இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்ந்தபோது இரவு சுமார் 10.00 இருக்கும். நானும், என் மகனும், ஊர்க்காரர்களும், ஊர்த்தலைவரும் அப்போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள். என் கணவர் காயம்பட்டு இரத்தக்காயத்துடன் இருந்ததைப் பார்த்து நான் மயக்கமடைந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், என் மகனும் மருத்துவரிடம் என்ன நடந்தது என்று சொன்னோம். என் தம்பி திருநாவுக்கரசுக்கு போன் செய்தபோது இரவு 08.00 மணியிருக்கும். அப்போது என் கணவர் இறந்துவிட்டதாக திருநாவுக்கரசிடம்

நான் சொன்னேன். என் கணவருக்கும், ஆஜர் எதிரிக்கும் இடையே எங்கள் புஞ்சைநிலத்தில் உள்ள கருவேல் மரம் வெட்டியது தொடர்பாக முன்பகை இருந்தது என்று சொன்னால் சரியல்ல. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து நானும், என் தம்பி திருநாவுக்கரசும் கிளம்பும் போது என்ன நேரம் என்று எனக்கு தெரியவில்லை. புகாரில் என்ன விவரங்கள் உள்ளது என்று திருநாவுக்கரசுக்குத்தான் தெரியும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் புகாரில் ஒரு கையெழுத்தும், என் கணவர் இறந்ததற்கும் ஒரு கையெழுத்து போட்டேன். இன்னொரு கையெழுத்து எப்போது போட்டேன் என்று ஞாபகம் இல்லை. புகார் கொடுத்த பிறகு போலிசார் வந்து ஊரில் விசாரித்தார்கள். என்னை வந்து பார்த்துவிட்டு போனார்கள், விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரி கல்லைத் தூக்கிப்போட்டதை சுமார் 25 அடி தூரத்தில் இருந்து நான் பார்த்தேன். எதிரி என் கணவர் மீது மூன்று முறை கல்லைப்போட்டார். எதிரி இரண்டாவது முறை கல்லைப்போட்டபோது நாங்கள் பார்த்தோம். மூன்றாவது முறை கல்லைப்போடுவதற்கு முன் எதிரியை பிடித்திருக்கலாம் என்று சொன்னால் அதற்குள் எதிரி ஓடிவிட்டார். நானும், எனது மகன் தவஸ்குமாரும், தேவராசும் மற்றும் சிங்காரவேலும் சத்தம்போட்டு ஓடுவதற்கு முன்பே கல்லை தலையில் போட்டுவிட்டு எதிரி ஓடிவிட்டார் என்று புகாரில் சொன்னேன். புகாரில் சொல்லியுள்ள விவரங்களுக்கு முரண்பட்டு தற்போது நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரை தாக்கப் பயன்படுத்திய கல்லையும், துணிகளையும் போலிசார் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். கல்லை போலிசார் எப்போது எடுத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. என் கணவர் அணிந்திருந்த ஆடைகளில் இரத்தக்கறை படிந்தது என்று சொன்னால் சரிதான். அந்த ஆடைகளை கழற்றி அவர் மேல் வேறு துணியை போட்டு ஆம்புலன்ஸில் எடுத்துச் சென்றோம். அந்த

இரத்தம்படிந்த என் கணவரின் ஆடைகளை போலிசார் எப்போது எடுத்துச் சென்றார்கள் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் போலிசார் கல்லைப் பார்த்தார்கள், இரத்தம்படிந்த துணிமணிகளையும் சம்பவ இடத்தில் பார்த்தார்கள். வந்த போலிஸ்காரர்களில் SI, Inspector இருந்தார்கள். எதிரிக்கும் என் கணவருக்கும் கருவேல் மரம் வெட்டுவது தொடர்பாக இருந்த முன்பகையை வைத்துக்கொண்டு எதிரிதான் இந்த சம்பவத்தில் ஈடுபட்டிப்பார் என்று சந்தேகத்தின் அடிப்படையில் என் தம்பி திருநாவுக்கரசுவின் தூண்டுதலின்பேரில் எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த தேதியில் இரவு 08.45 மணிக்கு சந்தேகத்தின்பேரில் எதிரியை நானும், என் மகனும் தாக்கினோம் என்றும் அது சம்மந்தமாக எதிரி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு தாக்கினோம் என்றும் எதிரி மயக்கநிலையில் இருந்ததால் எதிரி எங்கள் மீது புகார் கொடுக்கப்போகிறார் என்று நினைத்து முந்திக்கொண்டு எதிரி மீது பொய்ப்புகார் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் மது போதையில் இருசக்கர வாகனத்தில் இருந்து தவறி விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கில் சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.